# நிதித் துறை

## கோரிக்கை எண் 16

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2015–2016

**ஓ. பன்னீர்செல்வம்**
**நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2015

# பொருளடக்கம்


| தொடர் எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | கருவூலக் கணக்குத் துறை | 9 |
| 3. | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை | 28 |
| 4. | கூட்டுறவு தணிக்கைத் துறை | 63 |
| 5. | சிறு சேமிப்புத் துறை | 73 |
| 6. | அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் | 82 |
| 7. | அரசுத் துறை – நிறுவனத் தணிக்கைத் துறை | 89 |

# கொள்கை விளக்கக் குறிப்பு

# மானியக் கோரிக்கை எண்.16

# நிதித் துறை

# 2015–2016 ஆம் ஆண்டிற்கான

# கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை:**

‘‘வாரி பெருக்கி வளம்படுத்(து) உற்றவை

ஆராய்வான் செய்க வினை’’ – 512

என்ற திருவள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஏற்றமிகு தலைமையிலான இவ்வரசு, வருவாய் தரும் வழிமுறைகளைத் திறம்பட தெரிவுசெய்து, அதனைப் பெருக்கி, அத்தகைய வருவாயை தொலைநோக்கோடு முறையான வழிகளில் பயன்படுத்தி தமிழக மக்களுக்கு

நலன் பயக்கும் நல்ல பல திட்டங்களைக் கடந்த நான்கு ஆண்டுகளாக செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

**2.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையிலான இவ்வரசு இந்த நிதியாண்டு உட்பட தொடர்ந்து கடந்த ஐந்து நிதிநிலை அறிக்கைகளை பல புதிய திட்டங்களுடன் இந்த அரசின் பல்வேறு சாதனைகளையும் எடுத்துரைத்து தாக்கல் செய்து சாதனை படைத்துள்ளது.

**3.** நிதித்துறையின் முக்கிய பணிகள்:

(i) மாநில அரசின் நிதி மேலாண்மை தொடர்பான அனைத்து கொள்கை முடிவுகளை உருவாக்குதல், ஆய்வு செய்தல்.

(ii) ஒவ்வொரு ஆண்டும் அரசின் வரவினங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான

மதிப்பீட்டு அறிக்கையினை தயாரித்து சட்டமன்ற பேரவையில் தாக்கல் செய்தல்.

(iii) தமிழக அரசின் பொது நிதி நிருவாகத்தினை மேலாண்மை செய்தல்.

(iv) மாநிலக் கருவூலத்தை நிருவகித்தல்.

(v) வரவுகளையும் செலவுகளையும் சீராகப் பராமரிக்கும் ஒட்டுமொத்த பொறுப்புடன் கடன் பொறுப்புகளைத் திருப்பிக் கொடுக்கும் பொறுப்பினையும் வகித்தல்.

(vi) ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அரசின் நிதி இலக்குகளை எய்தும் பொருட்டு, வரவுக்கேற்றபடி செலவினங்களை செய்யும் பொருட்டு, தேவை, செலவுக்கேற்ற பயன், ஆகியவற்றின் அடிப்படையில் வரவு–செலவுத் திட்ட நிதியொதுக்கம், நிதி

நடைமுறை, முதலியவற்றை பல்வேறு துறைவாரியாக கூர்ந்தாய்வு செய்து மதிப்பீடு செய்தல்.

**4.** தமிழ்நாட்டின் பொருளாதாரம், அனைத்து முக்கியத் துறைகளிலும் அதன் இலக்கினை எய்துவதற்காக, பதினைந்து இலட்சம் கோடி ரூபாய் மொத்த முதலீட்டு மதிப்பீட்டில், பல்வேறு முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களைத் தெரிவு செய்து அவற்றை நிறைவேற்றுவதற்காக துறை சார்ந்த குறிப்பிட்ட உத்தி அணுகுமுறையுடன், தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் **2023**–ன் இரண்டாம் தொகுதியை, **21.02.2014** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். தமிழ்நாடு தொலைநோக்கு திட்டத்தினை நிறைவேற்றிடத் தேவையான நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் வகையில் தமிழ்நாடு

தொலைநோக்குத் திட்டம் **2023–ன்** மூன்றாம் தொகுதியாக “உள்கட்டமைப்பு செயல் திட்டம்”, வகுக்கப்பட்டு, அதற்கு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

**5.**தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (Tamil Nadu Infrastructure Fund Management Company Limited) என்ற புதிய நிறுவனம் **15.07.2015–ல்** ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஒரு சொத்து மேலாண்மை நிறுவனமாக செயல்படும். தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் புதிய நிதியுதவி அமைப்புகளை ஏற்படுத்தி நிர்வகிக்கும். இந்நிறுவனம் இந்திய பங்கு பரிவர்த்தனை வாரிய (SEBI) வழிகாட்டுதலின்படி உள்கட்டமைப்பு வசதிக் கடன் நிதியம் (Infrastructure Debt Fund), மாற்று முதலீட்டு நிதி (வகை–1) (Alternative

Investment Fund) மற்றும் உள்கட்டமைப்பு வசதி முதலீட்டு பொறுப்பாண்மை / கூட்டு நிறுவனம் (Infrastructure Investment Trust) உட்பட்ட உள்கட்டமைப்பு நிதியுதவி அமைப்புகளை (Infrastructure Finance Vehicles) உருவாக்கும். தமிழ்நாட்டின் நான்காம் தலைமுறை நிதி நிறுவனங்களான இந்நிறுவனங்கள், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் புகழ் பெற்ற தனியார் நிதி நிறுவனங்களுடன் கூட்டாக செயல்படும். இவற்றுக்கான நிதியானது உள்நாடு மற்றும் அயல்நாடுகளிலிருந்து முதலீடு செய்யக்கூடிய முதலீட்டாளர்களிடமிருந்து திரட்டப்படும். இந்நிதியானது, பொதுத் துறை, தனியார் துறை மற்றும் அரசு–தனியார் பங்களிப்பு முறையிலோ அல்லது ஒப்பந்தக் கொள்முதல் முறையிலோ உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு கடனாகவும்/முதலீடாகவும் தரப்படும்.

**6.** மேலும், மதுரை—தூத்துக்குடி தொழில் மேம்பாட்டு வழித்தடத் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் ஆளுகை அமைப்பின் ஒரு பகுதியாக மதுரை—தூத்துக்குடி தொழிலக பெருவழிச்சாலைத் திட்ட வளர்ச்சி நிதி மற்றும் மதுரை—தூத்துக்குடி தொழிலக பெருவழிச்சாலைத் திட்ட அமலாக்க சுழல்நிதி ஆகியவற்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**7.** இதன்படி நிதித்துறையின் கட்டுப்பாட்டில் மேற்குறிப்பிடப்பட்ட நிதிகளை நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது. இந்நிதிகளின் மேலாண்மையானது, தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். இத்தகைய முயற்சிகள் அனைத்தும், பெரிய அளவில் நிதி

தேவைக்கான இடைவெளியினை நிரப்பி, அதிகளவில் கட்டமைப்புத் திட்டங்களுக்குத் தேவையான கூடுதல் நிதி ஆதாரங்களை வழங்கி பொருளாதார வளர்ச்சியினை உயர்த்த உதவும்.

**8.** நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் பின்வரும் ஏழு துறைகள் இயங்கி வருகின்றன:-

(i) கருவூலக் கணக்குத் துறை

(ii) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

(iii) கூட்டுறவு தணிக்கைத் துறை

(iv) சிறு சேமிப்புத் துறை

(v) அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

(vi) அரசுத் துறை – நிறுவனத் தணிக்கைத் துறை

(vii) ஓய்வூதிய இயக்ககம்

தொடர் எண் **(i)** முதல் **(vi)** வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய

விவரங்கள் இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஓய்வூதிய இயக்ககத்தின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம், கோரிக்கை எண்.50 ‘‘ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகாலப் பயன்களும்’’ குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

## கருவூலக் கணக்குத் துறை

**9.** கருவூலக் கணக்குத் துறையானது கருவூலக் கணக்கு இயக்குநரை துறைத் தலைவராகக் கொண்டு நிதித்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இத்துறையின்கீழ் இயங்கும் ஆறு மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், ஏழு சம்பளக் கணக்கு அலுவலகங்கள், இரண்டு சார் சம்பளக் கணக்கு அலுவலகங்கள், **32** மாவட்டக் கருவூலங்கள், ஒரு ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், ஒரு உதவி

முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் 229 சார் கருவூலங்கள், கருவூலம் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

## மின்–ஆளுமை முயற்சிகள்

### (i) வலைதள சம்பள பட்டியல் (Web Payroll) :

10. இத்திட்டம் 2013–14ஆம் ஆண்டு முதல் கருவூலக் கணக்குத் துறை அலுவலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு தற்போது பிற துறை அலுவலகங்களிலும் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசுப் பணியாளர்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த தரவுதளத்தில் (Centralized Database) பணியாளர்களின் விவர எண்ணிக்கை, சம்பளம் மற்றும் அதைச் சார்ந்த பிற விவரங்களை பெறும் வகையில் வலைதள சம்பள பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகளை, மேற்கொள்ள

வழிவகுக்கப்பட்டுள்ளது. இதுதவிர, மனிதவள மேலாண்மை அமைப்பிற்கு இத்திட்டம் ஒரு சிறந்த கருவியாக அமையும்.

**(ii) ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் (IF&HRMS):**

**11.** நிதி மேலாண்மை தொடர்பான அரசுப் பணிகள் திறம்பட மற்றும் செவ்வனே நடைபெற நிதி மற்றும் மனித வள மேலாண்மையை ஒருமைப்படுத்தி ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு இதனடிப்படையில், திருவாளர்கள் அசென்சர் சர்வீஸஸ் (பி) லிமிடெட், சென்னை நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட திட்ட விவர அறிக்கையின்படி, திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தேர்வு செய்து திருவாளர்கள் விப்ரோ நிறுவனத்துடன் **288.91** கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் இதற்கான

ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான பணிகள் திருவாளர்கள் விப்ரோ நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**12.** இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள 22,000க்கும் மேற்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் நேரடியாக இணையத்தின் மூலம் சம்பள பட்டியலை கருவூலத்தில் சமர்ப்பிக்க இயலும். இத்திட்டத்தில் பொது நுழைவாயில் சேவையை (Common Gate Way) பயன்படுத்துவதால் அரசு நிகழ்நேர வருவாயை உடனுக்குடன் பெற இயலும். இதன்மூலம் பொதுமக்கள் தடைகளின்றி உடனடி சேவையை பெற இயலும். இத்திட்டத்தின் மூலம் அனைத்து அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேடு பராமரிப்பு எளிமையான முறையில் கணினிமயமாக்கப்பட்டு சம்பளப்பட்டியல், பதவி உயர்வு,

மாறுதல்கள், விடுப்பு மற்ற விபரங்கள் உடனுக்குடன் பதியப்படும். நிதி மற்றும் மனித வள மேலாண்மை திட்டம், எண்ம ஒப்பம் (Digital Signature) மற்றும் உயிரி அடையாளப் பதிவுமுறை (Bio - Matric) மூலம் உறுதிப்படுத்துவது போன்ற பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் நிதி நிலை விபரம் உடனுக்குடன் அரசுக்கு கிடைப்பதுடன் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை நிர்வாகம் குறித்த முடிவுகளை அரசு உடனுக்குடன் எடுக்க இயலும்.

**(iii) மின்னணு வழி ஓய்வூதியம் ( e-Pension) :**

**13.** இத்திட்டம் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் **01.09.2013** முதல் செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியதாரர்களின்

அனைத்து விவரங்களும் கணினியில் பதிவு செய்யப்பட்டு, மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் இதர பணப் பயன்கள் அவரவர் வங்கிக் கணக்கில் மின்னணு தீர்வை/மண்டல மின்னணு தீர்வை மூலம் (ECS/RECS) வரவு வைக்கப்படுகிறது. அனைத்து ஓய்வூதியதாரர்களும் தங்களது ஓய்வூதிய விவரங்கள் அவர்களின் வங்கி கணக்கில் பற்று வைக்கப்படுவதை இணையதளம் (online) மூலம் அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**(iv) ஓய்வூதியர் நேர்காணல்: (Mustering of Pensioners)**

**14.** மூத்த குடிமக்களுக்கு ஏற்படும் இடர்களைக் கருத்தில் கொண்டு, ஓய்வூதியதாரர்களின் வருட நேர்காணலை எளிமைப்படுத்தும் முயற்சியாக தேசிய தகவலியல் மையத்துடன் (NIC) இணைந்து,

ஓய்வூதியதாரர்கள் அடையாளம் காண உயிரி அடையாளப் பதிவு செய்தல் (Bio-Metric identification) மற்றும் வலைதள ஒளிப்பட கருவி (Web-camera) மூலம் புகைப்படம் எடுக்கும் முறை நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. வருட நேர்காணலின் போது தேசிய தகவலியல் மையத்தின் உதவியுடன், அனைத்து கருவூலங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்தில் விரல்ரேகை மின்னணு பதிவு முறையில் அடையாளம் காண்பதற்காக ஓய்வூதியதாரர்களின் விரல்ரேகை மற்றும் புகைப்படம் கணினியில் பதிவு செய்யப்படுகின்றன.

**15.** மேலும், ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்திட்டம் மூலம் ஓய்வூதியதாரர்கள் தங்களுக்கான அரசின் சேவைகள்

அனைத்தையும் எவ்வித சிரமமும் இன்றி மிக எளிமையாக பெற முடியும்.

**(v) ஓய்வூதிய ஆவணங்கள் கணினிமயமாக்கல் (Digitization):**

**16.** ஓய்வூதிய கொடுவை ஆணைகளை கணினிமயமாக்கும் முறை ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மற்றும் அனைத்து மாவட்ட கருவூல அலுவலகங்களிலும் தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (ELCOT) மூலம் நடைபெற்று வருகிறது. இதற்கென அரசு 1.26 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்து ஆணையிட்டுள்ளது. கணினிமயமாக்கப்பட்டபின், ஓய்வூதிய ஆவணங்கள் மின்னணு ஓய்வூதிய மென்பொருளில் இணைக்கப்படும். இச்செயலாக்கத்தின் மூலம் ஆவணங்கள் மற்றும் தகவல்களை நீண்டகாலம் பாதுகாப்பாக வைக்க முடியும். ஒரே நேரத்தில் பல்வேறு

பதிவுகளை பயன்படுத்தவும், பார்வையிடவும் இயலும். தற்போது இப்பணி நிறைவு பெறும் தருவாயில் உள்ளது.

**(vi) ஓய்வூதியதாரர்களுக்கான மின்னணு வாழ்வுச் சான்றிதழ்:**

17. தமிழ்நாட்டில் உள்ள **7,14,041** ஓய்வூதியதாரர்களில் **6,31,074** ஓய்வூதியதாரர்கள் சென்னையிலுள்ள ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார் கருவூலங்கள் மூலமும், மீதியுள்ள **82,967** ஓய்வூதியதாரர்கள் பொதுத் துறை வங்கிகள் மூலமும் ஓய்வூதியம் பெறுகின்றனர். பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர்களிடம், விரல்ரேகைப் பதிவு உட்பட அனைத்துத் தேவையான ஆவணங்களையும் ஓய்வூதியதாரர்கள் தற்போது சமர்ப்பிக்க வேண்டும். மேலும், ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் முதல் ஜுன்

வரையிலான ஆண்டு நேர்காணலுக்காக ஓய்வூதியதாரர்கள் ஓய்வூதியம் வழங்கும் அலுவலர் முன் நேரில் வந்தோ அல்லது உரிய அதிகாரியிடமிருந்து வாழ்வுச் சான்றிதழ் பெற்றோ பதிவை புதுப்பிக்க வேண்டும்.

**18.** இந்த முறையினால் வயது முதிர்ந்த ஓய்வூதியதாரர்களுக்கு மிகுந்த சிரமமும் அசௌகரியமும் ஏற்படுவதோடு உடல் நலிந்த ஓய்வூதியதாரர்களால் உரிய அதிகாரியிடம் நேரில் சென்று வாழ்வுச் சான்றிதழ் பெறவும் இயலவில்லை. மேலும், சமீபகாலங்களில் அதிக எண்ணிக்கையில் அரசு அலுவலர்கள் ஓய்வு பெற்றவுடன் உள்நாட்டின் பிறபகுதிகளுக்கும் மற்றும் வெளிநாடுகளுக்கும் இடம் பெயர்ந்து செல்லும் நிலை உள்ளது. இத்தகைய ஓய்வூதியதாரர்கள் ஆண்டு நேர்காணலுக்கென நேரில்

வருவதிலும் வாழ்வுச் சான்றிதழ் பெறுவதிலும் நடைமுறையில் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

**19. வாழ்வுச் சான்றிதழ் பெறும் நடைமுறையினை சீர்படுத்தவும், ஒளிவு மறைவில்லாத வகையில் இடர்பாடுகளை களையவும் ஒரு புதிய முயற்சியாக ஓய்வூதியதாரர்களுக்கு மின்னணு வாழ்வுச் சான்றிதழ் வழங்கும் முறை இந்த நிதியாண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.** இத்தகைய மின்னணு வாழ்வுச் சான்றிதழினை ஓய்வூதியதாரர்கள் பொது சேவை மையங்கள், வங்கிகள், கருவூலங்கள், கணினி மற்றும் கைபேசியில் விரல்ரேகைப் பதிவு மூலம் பதிவு செய்து கொள்ள இயலும். இச்சான்றிதழ்களை மின்னணு வாழ்வுச் சான்றிதழ் காப்பகத்திலிருந்து ஓய்வூதியம் வழங்கும் அலுவலர்கள் பெற்று பரிசீலிக்கவும், ஓய்வூதியதாரர்கள் தமது மின்னணு வாழ்வுச் சான்றிதழை

பதிவிறக்கம் செய்யவும் இயலும். இம்முறை செயல்படுத்தப்படும்போது கணிசமான அளவிற்கு ஓய்வூதியதாரர்களின் நேர்காணல் குறைக்கப்படும்.

**புதிய மருத்துவ காப்பீடு திட்டம் – 2012 :**

**20.** புதிய மருத்துவ காப்பீடு திட்டம் – **2012**, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீடு நிறுவனம், மூலம் **1.7.2012** முதல் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின் மூலம் அரசு அலுவலர்கள் மட்டுமின்றி உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், அரசு பல்கலைக் கழகங்கள் மற்றும் வாரியங்கள், இத்திட்டத்தை செயல்படுத்த முன்வரும் அரசு நிறுவனங்கள்/நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அவர்களின் தகுதிவாய்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு நான்காண்டுகளுக்கு நான்கு இலட்சம் ரூபாய் வரை

மருத்துவ காப்பீட்டு உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**21.** இத்திட்டத்தின் கீழ் **113** வகையான மருத்துவ அறுவை சிகிச்சை முறைகள் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு, புதுச்சேரி, பெங்களூரு, திருவனந்தபுரம் மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் உள்ள **649** அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாளான **01.07.2012** முதல் **31.08.2015** வரை **591.33** கோடி ரூபாய் மதிப்பில் **1,49,844** பயனாளிகள் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர்.

**ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்–2014:**

**22.** ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்–2014, இந்த அரசின் ஒரு புதிய முயற்சியாகும். இத்திட்டம் பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம் மூலமாக 01.07.2014 முதல் செயல்படுத்தப்படுகிறது. ஓய்வூதியம் பெறுபவர்களும் (வாழ்க்கை துணை உட்பட)/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் கட்டணமில்லா சிகிச்சை முறையில் நான்காண்டுகளுக்கு (2014–2018) இரண்டு இலட்சம் ரூபாய் வரை மருத்துவ வசதியினை பெறும்பொருட்டு இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**23.** இத்திட்டத்தில் ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள் பயன்பெறும் பொருட்டு 114 சிகிச்சை

மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அதில் 60 அறுவை சிகிச்சைகளும் மற்றும் 54 மருத்துவ சிகிச்சை நடைமுறைகளும் அடங்கும். மேலும் 647 மருத்துவமனைகள் இத்திட்டத்தின் கீழ் மருத்துவ உதவியினை வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் துவங்கிய நாள் 1.7.2014 முதல் 31.08.2015 வரையில் **153.10 கோடி ரூபாய்** மதிப்பில் கட்டணமில்லா முறையில் மருத்துவ உதவியினை 53,790 ஓய்வூதியதாரர்கள் பெற்றுள்ளனர்.

## பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் (Contributory Pension Scheme)

24. இத்திட்டம், 01.04.2003 மற்றும் அதற்கு பின்னர் பணியில் சேர்ந்த அரசு அலுவலர்களுக்காக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் பணியாளர் பணியேற்பு செய்த மாதம் முதல் பங்களிப்புத் தொகை

பிடித்தம் செய்யப்படுகிறது. தனி நபரின் பங்களிப்பிற்கு இணையாக அரசின் பங்களிப்பும் வழங்கப்படுகிறது. இதற்கான வட்டித் தொகை, பங்களிப்பு தொகை பிடித்தம் செய்யப்பட்ட மாதம் முதலே கணக்கிடப்பட்டு மொத்தத் தொகையும் ஓய்வூதிய நிதிக்கு மாற்றம் செய்யப்படுகிறது.

**25.** தற்போது பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் கருவூலக் கணக்குத்துறை மூலம் அரசுத் தகவல் தொகுப்பு விபர மைய உதவியுடனும் தேசிய தகவலியல் மையத்தின் உதவியுடனும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் உள்ள அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் ஓய்வூதிய பங்களிப்புத் திட்ட முகப்பு எண் (Index No) மற்றும் ஆண்டுமுறை கணக்கு விவரக்குறிப்பு (CPS Account Slip) **2012–13** ஆம் ஆண்டுவரை சென்னை மாநில கணக்காயராலும், **2013–14** ஆம் ஆண்டில் இருந்து ஆண்டுமுறை கணக்கு

விவரக் குறிப்பு (CPS Account Slip) அரசுத் தகவல் தொகுப்பு விபர மையத்தாலும் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டக் கருவூலங்களில் மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டம் இத்துறையால் நடத்தப்பட்டு, இத்திட்டத்தின் செயல்பாடு / முன்னேற்றமானது கருவூல கணக்கு இயக்ககத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**புதிய சார்–கருவூலங்கள் ஏற்படுத்துதல்:**

**26.** கடந்த மூன்று ஆண்டுகளில், **23** புதிய சார்கருவூலங்கள் உருவாக்கப்பட்டு தற்போது மொத்தம் **229** சார்கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. பொது மக்கள் சார் கருவூலங்களை எளிதாக அணுகும்பொருட்டு புதிதாக உருவாக்கப்பட்ட வருவாய் வட்டங்களில் மேலும் **14** புதிய சார்கருவூலங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்**

**27.** கருவூலக் கணக்குத் துறையின் **32** மாவட்டக் கருவூலங்களில் **29** மாவட்டக் கருவூலங்கள் அரசு கட்டடங்களிலும், மீதமுள்ள சென்னை, தூத்துக்குடி மற்றும் திருப்பூர் ஆகிய மூன்று மாவட்ட கருவூலங்கள் வாடகை கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. தூத்துக்குடி மாவட்டக் கருவூல கட்டடப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. திருப்பூர் மாவட்டக் கருவூலத்திற்கென திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் இதற்கான கட்டுமானப்பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. சென்னை மாவட்டக் கருவூலத்திற்கு நந்தனத்தில் புதிதாக கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த நிதித்துறை அலுவலக வளாகத்தில் இடம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இதன்படி, மாவட்டக் கருவூலங்கள் அனைத்தும் அரசுக்குச் சொந்தமான

கட்டடத்திலேயே இயங்குவதை இவ்வரசு உறுதி செய்கிறது.

28. மேலும், கடந்த மூன்று ஆண்டுகளில் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 64 சார்கருவூலங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு, அவற்றில் 15 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 42 கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 7 சார் கருவூலங்களுக்கு சொந்த கட்டடம் கட்ட நிலமாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

29. மேலும், இவ்வரசால் 21.60 கோடி ரூபாய் செலவில், நிதித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 10 அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது

கட்டடப்பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. மேலும், இப்பணிகள் இந்நிதியாண்டு இறுதிக்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

**30.** அரசாணை (நிலை) எண்.125, நிதித்துறை, நாள் 10.02.1921ன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை தோற்றுவிக்கப்பட்டது. மாநிலத்திலுள்ள நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், மாவட்ட உள்ளூர் நூலக அதிகார மன்றங்கள் மற்றும் ஏனைய தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் சட்டபூர்வத் தணிக்கையானது, இத்தகைய நிறுவனங்களுக்குரிய சட்ட விதிகளின்கீழ் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**31.** மாநில அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள உள்ளாட்சி அதிகார அமைப்புகள் மற்றும் பிற அதிகார அமைப்புகள் மத்திய, மாநில அரசுகளின் மானியங்களை பயனுள்ள வகையில் செலவு செய்வதனை உறுதி செய்வதற்கும், இவ்வமைப்புகள் பொது நிதியை எவ்வாறு செலவு செய்கின்றன என்பதன் மீது பொது நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் பதிமூன்றாவது மத்திய நிதிக் குழு மற்றும் இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படியும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் **2014** (**த**.நா.ச.எண். **24/2014)** தமிழ்நாடு சட்டப்பேரவையால் இயற்றப்பட்டது.

**32.** இச்சட்டத்தின் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் தணிக்கை மற்றும் இச்சட்டத்தின் பிரிவு **5**ன்படி பிற நிறுவனங்களின்

தணிக்கை, தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டத்தின்படியும் அதன்கீழ் இயற்றப்படவுள்ள விதிகளின்படியும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் இனிவருங்காலங்களில் மேற்கொள்ளப்படும்.

**33.** இச்சட்டம், உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் செய்யப்படும் தணிக்கைக்கு சட்டமுறை ஏற்பளிப்பு வழங்குகிறது. மேலும், உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால், தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் தொகுக்கப்பட்ட ஆண்டு அறிக்கையினை, மத்திய தலைமை கணக்குத் தணிக்கைத் தலைவரின் அறிக்கையுடன் சட்டப் பேரவையில் சமர்ப்பிக்கவும் வழிவகை செய்துள்ளது.

**34.** இன்றைய நாளில் பின்வரும் நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

| வ. எண் | நிறுவனங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| (i) | மாநகராட்சிகள் | 12 |
| (ii) | நகராட்சிகள் | 126 |
| (iii) | பேரூராட்சிகள் | 528 |
| (iv) | மாவட்ட ஊராட்சிகள் | 31 |
| (v) | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| (vi) | பல்கலைக் கழகங்கள் | 23 |
| (vii) | உள்ளூர் நூலக ஆணைக்குழுக்கள் | 32 |
| (viii) | மாவட்ட வேளாண்மை விற்பனைக்குழுக்கள் | 21 |
| (ix) | தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம் | 1 |
| (x) | வேளாண் விற்பனைக் கழக பொறியியல் பிரிவு | 2 |

| | | |
|---|---|---|
| (xi) | கோயம்பேடு மொத்த விற்பனை குழு | 1 |
| (xii) | உள்ளூர் திட்டக் குழுமங்கள் | 27 |
| (xiii) | கிராம ஊராட்சிகள் (சோதனை தணிக்கை மட்டும்) | 2506 |
| (xiv) | பல்வகை நிறுவனங்கள் | 09 |

**உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கை**

**35.** உள்ளாட்சி அமைப்புகளின் வரவு செலவுகள், சட்டங்கள், விதிகள் மற்றும் அரசாணைகளின்படி உண்மை நிலையை பிரதிபலிக்கின்றனவா என்பதை உறுதி செய்யும் பொருட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கையின் தணிக்கைக் குழுக்கள், உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைச் சரிபார்ப்பதுடன், தணிக்கை மேற்கொள்ளப்படும் நிறுவனங்களின் வருமானம் மற்றும் செலவினம் குறித்த

தனியுரிமை தணிக்கை (Proprietary Audit) மேற்கொள்கின்றன. மேலும் அரசு மற்றும் பிற நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் தொகை நன்முறையில் பயன்படுத்துவதையும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரி செலுத்துவோரின் நலன்கள் பாதுகாக்கப்படவும் அந்த தொகைகள் எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்கு முறையாக செலவிடப்படுகிறதா என்பதனை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை உறுதி செய்ய வேண்டும்.

**கிராம ஊராட்சி நிறுவனங்களின் சோதனை தணிக்கை**

**36.** கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் துறை வாயிலான முறைப்படியான தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால், மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கையில் **20** சதவீதம் சோதனைத் தணிக்கை மட்டும் இத்துறையால்

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, ஆண்டுதோறும் **2506** ஊராட்சிகள் இத்துறையால் தணிக்கை செய்யப்படுகின்றன. இத்துடன் கிராம ஊராட்சிகளின் உயரளவு வரவினங்கள் அல்லது மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மதிப்பு மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன ஆணையரால் அனுப்பப்படும் குறிப்பிட்ட புகார்களின் அடிப்படையில், இரண்டு சதவீத கிராம ஊராட்சிகளின் சோதனை தணிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

**உலக வங்கி நிதி உதவி பெறும் நிறுவனத் தணிக்கை**

**37.** உலக வங்கி நிதி உதவி பெறும் நிறுவனங்களின் தணிக்கையும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது. கோயம்புத்தூர், தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகத்தால் மேற்கொள்ளப்படும்

உலக வங்கி நிதி உதவித் திட்டங்களின் தணிக்கை இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டு, 2013–2014 வரையிலான தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது.

**நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் உடன் நிகழ் தணிக்கை (Concurrent Audit)**

38. தற்போது 12 மாநகராட்சிகளிலும், 10 நகராட்சிகளிலும் மற்றும் 14 பல்கலைக் கழகங்களிலும் உடன் நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2000–2001 ஆம் ஆண்டு முதல், அனைத்து 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் உடன் நிகழ் தணிக்கை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி தெரிவு செய்யப்பட்ட 116 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ஆய்வாளர் மற்றும் ஒரு துணை ஆய்வாளர் / ஒரு உதவி

ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ளன.

**மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் உடன் பின் தணிக்கை (Immediate Post Audit ) நடைமுறை**

**39.** உடன் நிகழ் தணிக்கை செயல்படுகின்ற கீழ்க்கண்ட 12 மாநகராட்சிகளிலும் 10 நகராட்சிகளிலும் உடன் பின்–தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம்முறையின்படி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு, தொகை வழங்கப்பட்டவுடன் செலவுச் சீட்டுக்கள் உடனுக்குடன் தணிக்கை செய்யப்பட்டு, குறைபாடுகள் நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்படுகின்றன. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை நிருவாகத்தால் உடனுக்குடன் களைய இம்முறை வழிகோலுகிறது.

| வரிசை எண். | மாநகராட்சிகள் | நகராட்சிகள் |
|---|---|---|
| (i) | சென்னை | ஆவடி |
| (ii) | சேலம் | காஞ்சிபுரம் |
| (iii) | கோயம்புத்தூர் | கடலூர் |
| (iv) | திருச்சி | கரூர் |
| (v) | மதுரை | கும்பகோணம் |
| (vi) | திருநெல்வேலி | புதுக்கோட்டை |
| (vii) | தூத்துக்குடி | பழனி |
| (viii) | வேலூர் | பொள்ளாச்சி |
| (ix) | திருப்பூர் | உதகை |
| (x) | ஈரோடு | நாகர்கோவில் |
| (xi) | தஞ்சாவூர் | – |
| (xii) | திண்டுக்கல் | – |

**40.** உடன்நிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அவற்றுக்கு வரப்பெற்ற பதில்கள் சரிபார்க்கப்பட்டு குறைகள் சரி செய்யப்பட்டதை உறுதி செய்யுமிடத்து, அந்த தணிக்கை மறுப்புரைகள்

நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புரைகளை உள்ளடக்கியதாக தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. அவ்வாறு தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகள் குறித்து பெறப்படும் பதில்கள் சம்பந்தப்பட்ட நிறுவனப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களோடு தணிக்கைக் குழுவினரால் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு, தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யப்படுகின்றன.

**உடன் நிகழ் தணிக்கைக்குட்படாத பிற நிறுவனங்களின் ஆண்டுத் தணிக்கை**

**41.** உடன் நிகழ் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள **116** நகராட்சிகள், **9** பல்கலைக் கழகங்கள், ஏனைய உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், உள்ளூர்

நூலக ஆணையக் குழுக்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்டபின்னர், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நகர்ப்புர உள்ளாட்சி மன்றங்களில் இயல்பாகச் சேரும் அடிப்படையில் (Accrual based) கணக்கு வைப்பு முறையை செயற்படுத்துதல்**

**42.** நகர்ப்புர உள்ளாட்சி நிறுவனங்களில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இயல்பாகச் சேரும் அடிப்படையில் கணக்கு வைப்பு முறை (Accrual based Accounting System) **1999–2000**, **2000–2001** ஆகிய கணக்கு ஆண்டுகளிலிருந்து இரு கட்டங்களாக செயற்படுத்தப்பட்டுள்ளது. **2002–2003** ஆம் ஆண்டு

முதல் இந்த கணக்கு முறை பேரூராட்சிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**43.** ஓர் ஆண்டின் நிதி சார்ந்த நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income and Expenditure Account), ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் உண்மையான நிதிநிலையை அறிந்து கொள்ள உதவும் ஐந்தொகைக் கணக்குகளையும் (Balance Sheet) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கு வைப்பு முறை கோட்பாட்டின்படி தயாரித்து, கணக்குகளைப் பேணுவதே இந்த கணக்கு முறையின் இலக்கு மற்றும் நோக்கமாகும்.

**44.** இந்த நடைமுறையினால் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், உரிய மதிப்பீட்டு முறைகளோடு,

கணக்குகளில் சேர்க்கப்பட்ட அவற்றின் சொத்துக்களை சொத்து பதிவேட்டின் மூலம் அறிந்துகொள்ள முடியம். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மேம்படுத்தப்பட்ட கணக்கு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், மூலதன திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்க நிதி நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இதன் மூலம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மூலதன மற்றும் நலத்திட்டங்களுக்கு நிதி பெறுகிற வாய்ப்பு அதிகரித்துள்ளது.

**உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டு கணக்குகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் ஆண்டு கணக்குகளுக்குத் தணிக்கை சான்று வழங்குதல்**

**45.** உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று வழங்குவது மிகவும் முக்கியமான பணியாகும். மேலும் முறையான தணிக்கைச் சான்று அளிக்கப்படாத கணக்குகள்

அர்த்தமற்றவை என்பது பன்னாட்டு அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். இதன்படி, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகள், அரசாணை (நிலை) எண்.93 நிதித் (நி.கு.IV) துறை, நாள்.28.3.2003–இல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, இத்துறையின் அலுவலர்களால் தணிக்கைச் சான்றளிக்கப்படுகின்றன.

**46.** உலக வங்கியின் நிதி உதவியுடன் கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக் கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு நவீன பாசன வேளாண்மை, நீரமைப்பு மீட்புப்பணி மற்றும் மேலாண்மைத் (IAMWARM) திட்டத்திற்கு இத்துறையினால் தணிக்கைச் சான்று அளிக்கப்படுகிறது.

**தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை**

**47.** தணிக்கை அறிக்கையின் மீது தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின் போது கண்டறியப்படும் கடுமையான முறைகேடுகள், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாக அதிகாரிகளின் கவனத்திற்கு உடனடியாக எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நிதிக்கையாடல், பொது மக்களின் பணத்திற்கு ஏற்பட்ட இழப்பு போன்ற கடுங்குறைபாடுகள், மாதாந்திர கால முறை அறிக்கைகள் மற்றும் சிறப்பு அறிக்கைகள் மூலம் தொடர் நடவடிக்கையாக அரசுக்கும், நிர்வாகத் துறைத் தலைவர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

**48.** வழக்கமாக தணிக்கை மறுப்புரைகளுக்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு, மெய்யான நேர்வுகளில் தணிக்கை மறுப்புரைகள் கைவிடப்படுகின்றன. மேலும் தணிக்கை மறுப்புரைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிருவாகத் துறை ஏற்பாடு செய்யும் இணை கூட்டமர்வின் மூலமாகவும் இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களாலும் தணிக்கை மறுப்புரைகளுக்கு உடனடி தீர்வு காணப்படுகிறது.

**49.** நிறுவனங்கள் தணிக்கையின் போது தொடக்க நிலை மற்றும் இறுதி நிலை விவாதமுறை பின்பற்றப்படுவதால், அத்தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக் காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது. அரசாணை (நிலை) எண். 83, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,

நாள்.01.06.2009–ல் இது தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய விரிவான வழிகாட்டுதல்களை அரசு வழங்கியுள்ளது.

**மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர் நிலைக் குழு அமைத்தல்**

50. ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட உயர்நிலைக் குழுக்களும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையரைத் தலைவராகக் கொண்டு மாநில உயர்நிலைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. 2014–2015–ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 74 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, 2254 எண்ணிக்கையிலான தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவெடுக்கப்பட்டுள்ளன.

**51.** பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டும் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரை தலைவராகக் கொண்டும், பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக் குழுக்களை அமைக்க, அரசாணை (நிலை) எண்.1 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பேரூ2) நாள்.04.01.2007–ல் ஆணையிடப்பட்டுள்ளது. 2014–2015–ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 26 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, 3803 எண்ணிக்கையிலான தணிக்கை மறுப்புரைகள் மீது மாவட்ட உயர்நிலைக் குழுக்களால் முடிவெடுக்கப்பட்டுள்ளன.

**52.** அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளுக்கான மாவட்ட

அளவிலான உயர் நிலைக் குழு, நகராட்சி நிருவாக இயக்குநரக நிதி ஆலோசகரை தலைவராகக் கொண்டும், மாநில அளவிலான உயர்நிலைக் குழு, நகராட்சி நிருவாக இயக்குநரைத் தலைவராகக் கொண்டும் அரசாணை (நிலை) எண்.65, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 22.5.2007ன்படி அமைக்கப்பட்டுள்ளது. 2014–2015–ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 20 உயர்நிலைக்குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 458 எண்ணிக்கையிலான தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவெடுக்கப்பட்டுள்ளன.

**நிருவாகத் துறையும் மற்றும் தணிக்கைத் துறையும் இணைந்து நடத்தும் ஆய்வுக் கூட்டங்கள்**

**53.** கணக்குகள் மற்றும் தணிக்கைத் தொடர்பான பிரச்சனைகளை ஆரம்ப நிலையிலேயே தீர்வு காண ஏதுவாக, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மற்றும்

ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான நிருவாக மற்றும் தணிக்கை அலுவலர்களின் கூட்டு ஆய்வுக் கூட்டம், மாவட்ட / மண்டல மற்றும் மாநில அளவில் நடத்தப்படுகின்றன. இவ்வாறே இறுதி நிலை விவாதம் மற்றும் தணிக்கை அறிக்கை ஒப்புதல் ஆகியவற்றின்போது தணிக்கை செய்யப்படுகிற நிறுவனங்களின் செயல்நிலை அலுவலர்களோடு நிருவாகத்தின் உயர்நிலை அலுவலர்களும் பங்கு பெறுகின்றனர். இதனால் தணிக்கையின்போது சுட்டிக்காட்டப்பட்ட தவறுகளை உடனுக்குடன் சரி செய்து கொள்ள ஏதுவாகிறது.

**மானியங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான பயன்பாட்டுச் சான்றிதழ் அளித்தல்**

**54.** தணிக்கை வரம்பிற்குட்பட்ட பல்கலைக் கழகங்கள் ஏனைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு,

பல்கலைக் கழக மானியக்குழு, மாநில / மத்திய அரசு மற்றும் ஏனைய நிதி அளிக்கும் நிறுவனங்களால் வழங்கப்படும் மானியங்களை பயன்படுத்தியதற்கான தணிக்கைச் சான்றிதழ்கள், இத்துறையால் வழங்கப்படுகின்றன. இதனால் திட்டப் பணிகள் முடிவடைந்தவுடன் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக் கழகங்களால் பயன்பாட்டுச் சான்றிதழ்கள் உடனடியாக வழங்கப்படுகின்றன.

**சிறப்புப் பணிகள்**

**55.** வழக்கமான தணிக்கைப் பணிகள் தவிர கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**(i) உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பலன்கள் அனுமதித்தல்/வழங்கல்:**

**56.** நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு, சான்று / ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள 34,283 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களில், 31.08.2015 அன்றுவரை 32,071 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் தாங்கள் உயிருடன் இருப்பதற்கான வாழ்வுச் சான்றிதழ் அளித்து, நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியத்திற்கான தொகை, சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களால் மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரகத்தால் பராமரிக்கப்படும் சம்பந்தப்பட்ட ஓய்வூதிய நிதியத்திற்கு வழங்கப்படுகிறது.

**(ii) உள்ளாட்சி நிறுவனங்களின் ஓய்வூதியர்களின் குறை தீர்த்தல்**

**57.** உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அவர்களது ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் தொடர்பான குறைகளைக் களைவதற்கும் தேவைப்படும் விவரங்களைக் காலதாமதமின்றி உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்காகவும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் ஒன்று இயங்கி வருகிறது.

**(iii) நகராட்சி ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டத்தை நிருவகித்தல்**

**58.** அரசு ஓய்வூதியதாரர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருவதைப்போல் மருத்துவ நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் ஆகியவை, அரசாணை (நிலை) எண்.120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.25.5.1999–ன்படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 1.8.1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 2014–2015ஆம் நிதியாண்டு மற்றும் இந்நிதியாண்டில் 2015 ஆகஸ்டு மாதம் வரை கீழ்கண்டபடி கோரிக்கைகள் ஏற்கப்பட்டு தொகை அனுமதிக்கப்பட்ட இனங்களின் விவரங்கள் வருமாறு.

| மருத்துவ நலத் திட்டம் | | குடும்பப் பாதுகாப்புத் திட்டம் | |
|---|---|---|---|
| கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| 623 | 163.60 | 656 | 267.54 |

**(iv) ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நலம் மற்றும் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை நிருவகித்தல்**

**59.** அரசு ஓய்வூதியதாரர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருவதைப்போல் மருத்துவ நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் அரசாணை (நிலை) எண். 23, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, நாள்.15.03.2013–இல் ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக பின்பற்றத்தக்க வழிமுறைகள் மற்றும் செயல்முறைகள் தொடர்பாக

அரசாணை (நிலை) எண்.142, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 07.11.2014–ல் வெளியிடப்பட்டுள்ளது.

**(v) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்**

**60.** உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றின் முதலீடுகளும் அரசால் 1967ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. அவர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளில் உள்ள இருப்புகளுக்கு, வட்டி வழங்குவதற்கு, உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2014–2015ஆம் ஆண்டில் 12 கோடி ரூபாய் அளவிலான தொகை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில்,

மேற்காணும் ஒதுக்கீட்டுத் தொகை முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக ஒப்பளிப்பு செய்யப்பட்டது. மேலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக ஒப்பளிப்பு செய்யும் பொருட்டு 4 கோடி ரூபாய், 18.02.2015 அன்று அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**(vi) அறக்கட்டளைகளின் நிருவாகம்**

**61.** உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், **1.4.1952** முதல் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அரசு, அறக்கட்டளைகளை ஏற்று, ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

**62.** இந்த அறக்கட்டளை நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகை, சம்பந்தப்பட்ட

நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. தற்போது, அறக்கட்டளை நிதிப் பொருளாளர் என்ற நிலையில் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரின் கட்டுப்பாட்டில் **14.18** இலட்சம் ரூபாய் மதிப்புள்ள **4** மத்திய அரசு அறக்கட்டளைகளும், **20.20** கோடி ரூபாய் மதிப்புள்ள **874** மாநில அரசு அறக்கட்டளைகளும் உள்ளன. **2014–2015**ஆம் நிதியாண்டில் அறக்கட்டளைகளின் வட்டி வருவாயிலிருந்து படிப்புதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியன வழங்குவதற்காக **273** அறக்கட்டளைகளுக்கு **15.76** இலட்சம் ரூபாய் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்**

**63.** அரசு உத்தரவுகளின்படி, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட பங்களிப்பு

தொகையையும், அத்தொகை அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டதையும் சரிபார்ப்பதற்காக, ஒரு சிறப்புக் குழு உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் ஏற்படுத்தப்பட்டு, **01.04.2003** முதல் **31.03.2014** வரையிலான பதினோரு ஆண்டுகளுக்கான மேற்காணும் விவரங்கள் திரட்டப்பட்டு சரிபார்க்கப்பட்டுள்ளது.

**64.** இதன்படி, சென்னை நீங்கலாக **9** மாநகராட்சிகள், நிலை உயர்த்தப்பட்ட திண்டுக்கல் மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சிகளை உள்ளடக்கிய **125** நகராட்சிகள், **385** ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் **528** பேரூராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களின் பங்களிப்பான ரூ.**59,24,40,463/—**யுடன் நிருவாகப் பங்குத் தொகையையும் சேர்த்து அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**மின் ஆளுமை முயற்சிகள்**

**65.** உள்ளாட்சி அமைப்பின் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வூதிய பணப்பயன்களை அவரவர் வங்கிக் கணக்கில் மின்னணு தீர்வை/மண்டல மின்னணு தீர்வை மூலம் நேரடியாக வழங்க வகை செய்வதற்கான மென்பொருளை உருவாக்குவதற்கு அரசு **30** இலட்சம் ரூபாய் அனுமதியளித்துள்ளது. இதற்கான பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

**66.** "தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு" என்ற திட்டத்தினை **2015–2016**ம் ஆண்டில் செயல்படுத்திட அரசு கொள்கை அளவில் ஒப்பளித்துள்ளது. இது இத்துறைத் தணிக்கையாளர்கள் கணினி மயமாக்கப்பட்ட சூழலில் பணிபுரிய உதவுவதோடு சிறப்பான தணிக்கை மேற்கொள்வதையும்

இவ்வமைப்பு உறுதிப்படுத்தும். மேலும் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நீண்டகாலமாக தீர்வு செய்யப்படாமல் நிலுவையாக உள்ள தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்யும் பொருட்டு அனைத்து தணிக்கைத் தடைகளையும் கணிணிமயமாக்கவும் அவற்றை அரசுத் தகவல் தொகுப்பு விபர மையத்தின் உதவியோடு தணிக்கைத் தடைகளின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தி நிறுவனங்களின் பதில்களைப் பெற்று தணிக்கைத் தடைகளை எளிதாக தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**தணிக்கை நடைமுறை கையேட்டினை புதுப்பித்தல்**

**67.** ஊரக உள்ளாட்சி நிறுவனங்களுக்கான தணிக்கை நடைமுறை நூல், பல்கலைக்கழகங்களின் தணிக்கை நடைமுறை நூல், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை பணியாளர்களுக்கான பயிற்சி

நடைமுறை நூல் ஆகியவற்றை புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன

**நிருவாகச் சீர்திருத்தம்**

**68.** உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் துணை ஆய்வர்களுக்கு இயல்புநிலையில் சேரும் அடிப்படையில் கணக்கு வைப்புமுறைத் (Accrual Based Accounting System) தொடர்பான பயிற்சி அளித்திட அரசு 10 இலட்சம் ரூபாய் அனுமதியளித்துள்ளது.

**69.** சேலத்தில் ஒரு புதிய மண்டல இணை இயக்குநர் அலுவலகம் தோற்றுவிக்கப்பட்டு **01.02.2015** முதல் செயல்பட்டு வருகிறது.

**தணிக்கை நிலை**

**70.** **2012–2013–**ஆம் நிதியாண்டின் இறுதியில், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள்,

ஊராட்சி ஒன்றியங்கள், பல்கலைக் கழகங்கள் மற்றும் நூலக ஆணைக் குழு உள்ளிட்ட நிறுவனங்களின் தணிக்கை 2008–2009ஆம் ஆண்டுவரை மட்டுமே முழுமையாக முடிக்கப்பட்டு நிலுவைகள் பெருமளவில் இருந்தன. அதன் பிறகு எடுக்கப்பட்ட உறுதியான தொடர் நடவடிக்கைகள் மூலம் 31.07.2015 அன்றைய நிலையில் 2013–2014ஆம் ஆண்டு முடிய அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், கிராம ஊராட்சிகளின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மேலும் பேரூராட்சிகளின் 2013–2014ஆம் ஆண்டிற்கான தணிக்கை 30.09.2015க்குள் முடிவடையும் நிலையில் உள்ளது. மேலும் அனைத்து மாநகராட்சிகள், (சென்னை மாநகராட்சி நீங்கலாக) நகராட்சிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் நூலக ஆணைக் குழுக்களின் 2013–2014ஆம் ஆண்டு தணிக்கையினை

31.10.2015க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்காணும் நிறுவனங்களின் 2014–2015ஆம் ஆண்டிற்கான தணிக்கை, 30.06.2016க்குள் முடிக்கவும் 2015–2016ஆம் ஆண்டிற்கான தணிக்கை 01.07.2016 முதல் மேற்கொள்ளும் வகையில் பணித்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**தணிக்கைக் கட்டணம்**

71. பல்கலைக் கழகத் தணிக்கைக்கு 100 சதவீத தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தணிக்கைக்கு 50 சதவீத தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், வேளாண் விற்பனை குழுக்கள் தணிக்கைக்கு மொத்த செலவினத்தில் இரண்டு சதவீதமும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. 2014–2015–ஆம் நிதியாண்டில் 17.90 கோடி ரூபாய்

தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

## கூட்டுறவு தணிக்கைத் துறை

**72.** சந்தானம் குழு மற்றும் நிருவாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின் படி கூட்டுறவுத் துறையின் தணிக்கைப் பிரிவானது, தனியாகப் பிரிக்கப்பட்டு, 17.06.1981 முதல் கூட்டுறவு தணிக்கைத் துறை, தனித் துறையாக செயல்பட்டு வருகிறது. 1983ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் 80–வது பிரிவின்படி, பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்த்து 14 நிருவாகப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின்

தணிக்கைகளை மேற்கொள்வதே இத்துறையின் முக்கியமான பணியாகும்.

**73.** கீழ்க்காணும் துறைகளின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்டவையாகும்.

| **வ. எண்.** | **பதிவாளரின் பெயர்** | **கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை** |
|---|---|---|
| (i) | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | **8971** |
| (ii) | கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர் | **1397** |
| (iii) | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | **315** |
| (iv) | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம். | **1145** |
| (v) | தலைமைச் செயல் அலுவலர், பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் | |

| | | |
|---|---|---|
| (vi) | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | **880** |
| (vii) | மீன் வளத் துறை இயக்குநர் | **1347** |
| (viii) | கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவ பணிகள் இயக்குநர் | **140** |
| (ix) | சர்க்கரைத் துறை ஆணையர் | **17** |
| (x) | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | **116** |
| (xi) | வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர் | **120** |
| (xii) | பட்டுப்புழு வளர்ப்புத் துறை இயக்குநர் | **25** |
| (xiii) | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை இயக்குநர் | **124** |
| (xiv) | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் | **47** |
| | **மொத்தம்** | **14644** |

**கூட்டுறவு தணிக்கைத் துறையின் நோக்கம்**

**74.** கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை சரிபார்த்தல், அச்சங்கங்களின் இருப்பு

நிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்ட கணக்குகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துதல் போன்றவை கூட்டுறவு தணிக்கைத் துறையின் முதன்மைப் பணிகளாக உள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள், அதற்கான சட்டம், விதி, நடைமுறைகள் ஆகியவற்றின்படி செயல்படுவதை உறுதிபடுத்திக்கொள்ள சங்க உறுப்பினர்களுக்கு கூட்டுறவு தணிக்கை உதவியாக இருந்து வருகிறது. மேலும் அரசின் நிதியுதவி எதன்பொருட்டு வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு உறுப்பினர்களும், சமுதாயமும் முழுமையாகப் பயன் அடைந்துள்ளனர் என்பதையும் உறுதி செய்கிறது.

## நகர வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்

**75.** முனைவர் வைத்தியநாதன் குழுவின் அறிக்கையை செயல்படுத்திய பின்னர், **2009** ஆம் ஆண்டிலிருந்து அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகளின் தணிக்கையும் மத்திய ரிசர்வ் வங்கியின் பரிந்துரையின்படி ரூபாய் **25** கோடிக்கு மேல் வைப்பீட்டு தொகைகளை கொண்டுள்ள நகர கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வமான தணிக்கைகளும் பட்டய கணக்கர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட வங்கிகளின் உடன் நிகழ் தணிக்கைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**சட்ட முறை தணிக்கை**

**76.** சிறிய அளவிலான பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை, தொடர் தணிக்கை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 45 நாட்களுக்குள் முடிக்கப்பெற வேண்டும். தணிக்கை மேற்கொள்ளப்படும் காலத்திற்கென தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்படுகிறது. 2014–2015 ஆம் ஆண்டில் தணிக்கைக் கட்டணமாக 3.65 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது. அதிக அளவிலான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான கட்டணம் அடிப்படைவிதி 127–ன் கீழ் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்படுகிறது. அடிப்படை விதி 127–ன் கீழ்,

**2014–2015** ஆம் ஆண்டில் தணிக்கை மேற்கொண்ட வகையில் பணியாளர்களின் செலவினத் தொகையாக **9.77** கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

**தணிக்கை முன்னேற்ற நிலை**

**77.** கடந்த ஐந்தாண்டுகளில் தணிக்கை முன்னேற்ற விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | வருடம் | கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை | தணிக்கை முடிக்கப்பட்ட சங்கங்கள் | நிலுவையிலுள்ள சங்கங்கள் |
|---|---|---|---|---|
| (i) | 2010-2011 | 17029 | 16354 | 675 |
| (ii) | 2011-2012 | 16742 | 15879 | 863 |
| (iii) | 2012-2013 | 16554 | 15383 | 1171 |
| (iv) | 2013-2014 | 15955 | 14465 | 1490 |

**78.** நிலுவையிலுள்ள மேற்கண்ட கூட்டுறவு சங்கங்களின் தணிக்கைக்குரிய பதிவேடுகள் நீதிமன்றம், விசாரணை அலுவலர் மற்றும் வணிக குற்றப்புலனாய்வு துறையினரிடம் உள்ளதால் மேற்கண்ட சங்கங்களின்

தணிக்கையை முடிக்க இயலாத நிலை உள்ளது. இப்பதிவேடுகள் கிடைக்கப்பெற்றவுடன் இச்சங்கங்களில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தணிக்கை முடிக்கப்படும்.

**சிறப்பு அறிக்கைகள்:—**

**79.** தணிக்கையில் கடுங்குறைகள் காணும்போது அது தொடர்பான அனைத்து விவரங்களும் அடங்கிய சிறப்பு அறிக்கைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன. **2014—2015**—ஆம் ஆண்டில் **47.18** கோடி ரூபாய் தொடர்புடைய **233** சிறப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**மின் ஆளுமை வாயிலாக தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு:—**

**80.** ‘‘தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு’’ என்ற திட்டத்தினை **2015—2016**ஆம்

ஆண்டில் செயல்படுத்திட அரசு முடிவு செய்துள்ளது. இது இத்துறைத் தணிக்கையாளர்கள் கணினி மயமாக்கப்பட்ட சூழலில் பணிபுரிய உதவுவதோடு சிறப்பான தணிக்கை மேற்கொள்வதையும் உறுதிப்படுத்தும்.

**நிருவாக சீர்திருத்தம்:—**

**81.** கூட்டுறவு தணிக்கைத் துறையின் நிருவாகத்தினை மேம்படுத்துவதற்கும் தணிக்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் அடிப்படை விதி **127**—ன்கீழ் உள்ள **16** உதவி இயக்குநர் பணியிடங்கள் துணை இயக்குநர் பணியிடங்களாக நிலை உயர்வு செய்யப்பட்டுள்ளன. மேலும் கூட்டுறவு தணிக்கைத் துறையில் உள்ள இணை இயக்குநர்களுக்கு அவர்களது அலுவலகப் பணிகளுக்காக **6** சீருந்துகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

**தணிக்கையாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி :–**

**82.** தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரம் இவற்றினை மேம்படுத்த பல்வேறு வகையான பயிற்சிகளும், புத்தாக்கப் பயிற்சிகளும் வருடந்தோறும் அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி திட்டத்தில் கூட்டுறவு தணிக்கைத் துறையின் விதிகள், அடிப்படை கொள்கைகள், வழிகாட்டுதல்கள் ஆகியவை உள்ளடக்கிய பயிற்சி வழங்கப்படுகிறது. இது தணிக்கையாளர்கள் பல்வேறு வகையான சங்கங்களில் திறம்பட தணிக்கைப் பணி ஆற்றிட உதவுகிறது. 2014–2015ஆம் ஆண்டில் இத்தகைய 8 பயிற்சிகள் மூலமாக 318 தணிக்கையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இத்துடன் மாவட்ட மைய கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு நகர வங்கிகளில் உடன் நிகழ்

தணிக்கை மேற்கொள்ளும் 100 தணிக்கையாளர்களுக்கு பிப்ரவரி மற்றும் மார்ச் 2015 திங்களில் 'நபார்டு' வங்கி மற்றும் மத்திய ரிசர்வ் வங்கி அலுவலர்கள் வாயிலாக பயிற்சி வழங்கப்பட்டது.

## சிறு சேமிப்புத் துறை

**83.** சிறுசேமிப்பு, பொது மக்களிடம் உபரியாக உள்ள பணத்தினை சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்வதற்கு ஒரு முக்கிய கருவியாக விளங்குகிறது. இத்திட்டங்கள் அதிக பாதுகாப்பானதாகவும், கணிசமான வட்டியுடன் திரும்பக் கிடைக்க கூடியதாகவும் உள்ளன. மத்திய அரசின் நிதி அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டு அஞ்சலகங்கள் மூலமாக சிறுசேமிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மாநிலத்தில் திரட்டப்படும் மாதாந்திர நிகர சிறுசேமிப்பு வசூலில் 50 சதவீதம்,

அந்தந்த மாநிலத்தின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு நீண்டகாலக் கடனாக **9.5** சதவீத ஆண்டு வட்டி விகிதம் அடிப்படையில் மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

**சிறு சேமிப்புத் திட்டங்கள்**

**84.** சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கும் பயனளிக்கும் வகையில் பல சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. **1.04.2015** முதல் மத்திய அரசு, சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்களை கீழ்கண்டவாறு மாற்றி அமைத்துள்ளது. மேலும் மத்திய அரசு மீண்டும் 'கிசான் விகாஸ்' பத்திரத்திட்டத்தை, **19.11.2014** முதல் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.

| தொடர் எண் | திட்ட விவரம் | 01.04.2013ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%) | 01.04.2014 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%) | 01.04.2015 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%) |
|---|---|---|---|---|
| (i) | அஞ்சலக சேமிப்பு கணக்கு (POSA) | 4.0 | 4.0 | 4.0 |
| | **கால வைப்பீடு** | | | |
| (ii) | 1 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 8.2 | 8.4 | 8.4 |
| | 2 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 8.2 | 8.4 | 8.4 |
| | 3 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 8.3 | 8.4 | 8.4 |
| | 5 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 8.4 | 8.5 | 8.5 |
| (iii) | அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் (PORD 5 ஆண்டுகள்) | 8.3 | 8.4 | 8.4 |
| (iv) | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS 5 ஆண்டுகள்) | 9.2 | 9.2 | 9.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம் (POMIS) | 8.4<br>(5 ஆண்டு) | 8.4<br>(5 ஆண்டு) | 8.4<br>(5ஆண்டுகள்) |
| (vi) | தேசிய சேமிப்புப் பத்திரம்<br>NSC- VIIIவது வெளியீடு | 8.5<br>(5 ஆண்டுகள்) | 8.5<br>(5 ஆண்டுகள்) | 8.5<br>(5ஆண்டுகள்) |
| (vii) | 10 ஆண்டு தேசீய சேமிப்புப் பத்திரம்<br>NSC-IXவது வெளியீடு | 8.8 | 8.8 | 8.8 |
| (viii) | பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்<br>(PPF 15 ஆண்டுகள்) | 8.7<br>(ஒரு நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1,00,000) | 8.7<br>(ஒரு நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1,50,000) | 8.7<br>(ஒரு நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1,50,000) |
| (ix) | கிஸான் விகாஸ் பத்திரம் (KVP) | -- | 8.7<br>(100 மாதங்களில் பணம் இரட்டிப்பாகும்)<br>(19.11.2014 முதல்) | 8.7<br>(100 மாதங்களில் பணம் இரட்டிப்பாகும்) |
| (x) | சுகன்யா சம்ரிதி கணக்கு வைப்புத் திட்டம் (செல்வமகள் சேமிப்புத் திட்டம்) | | 9.1 | 9.2 |

**செல்வமகள் சேமிப்புத் திட்டம்**

**85.** மத்திய அரசு, அண்மைக் காலத்தில் செல்வமகள் சேமிப்புத் திட்டம் என்ற சேமிப்புத் திட்டத்தை குறிப்பாக பெண் குழந்தைகளுக்காக 03.12.2014 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கான வட்டி விகிதம், 01.04.2015 முதல் 9.1 சதவீதத்திலிருந்து 9.2 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 10 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஓர் ஆண்டுக்கு 1.50 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்யலாம். மூத்த குடிமக்களுக்கான சேமிப்புத் திட்டடத்திற்கும் 1.4.2015 முதல் வட்டிவிகிதம் 9.2 சதவீதத்திலிருந்து 9.3 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**சிறுசேமிப்பு வசூல் விவரங்கள்**

86. 2005–2006 முதல் 2014–2015 வரையிலான நிதியாண்டுகளில் சிறுசேமிப்புத் திட்டங்களின் வாயிலாக தமிழகத்தில் திரட்டப்பட்ட நிதி வசூல் விவரங்கள் வருமாறு :–

**(ரூபாய் கோடியில்)**

| தொடர் எண் | ஆண்டு | நிகர இலக்கு | மொத்த வசூல் | நிகர வசூல் |
|---|---|---|---|---|
| (i) | 2005-06 | 5000 | 12455.75 | 5594.13 |
| (ii) | 2006-07 | 5700 | 10158.54 | 2637.25 |
| (iii) | 2007-08 | –– | 7791.11 | -965.98 |
| (iv) | 2008-09 | –– | 8486.64 | -1216.73 |
| (v) | 2009-10 | –– | 12113.39 | 1539.39 |
| (vi) | 2010-11 | –– | 13414.56 | 516.32 |
| (vii) | 2011-12 | –– | 10607.50 | -2100.74 |
| (viii) | 2012-13 | –– | 9797.05 | -1506.83 |
| (ix) | 2013-14 | –– | 9624.19 | -730.78 |
| (x) | 2014-15 | -- | 10936.37 | - 1084.12 |

87. தமிழகமெங்கும் சிறுசேமிப்புத் திட்டங்களை ஊக்கப்படுத்துவதிலும், சிறுசேமிப்பு முகவர்கள் மற்றும் முதலீட்டாளர்களின் நலனைப்

பேணுவதிலும் சிறுசேமிப்பு இயக்குநரகம் முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களும், சென்னையைப் பொறுத்தவரை மாநகராட்சி ஆணையாளரும் சிறுசேமிப்புத் திட்டங்களை, பொது மக்களிடையே கொண்டு செல்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

**முகவரமைப்பு மற்றும் முகவர்களுக்கான மத்திய அரசின் தரகுத் தொகை மற்றும் மாநில அரசின் ஊக்கத்தொகை**

**88.** சிறுசேமிப்புத் தொகையைத் திரட்டுவதற்காக மாநிலம் முழுவதிலும் முகவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள், சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிப்பதிலும், வசூல் பணிகளிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் மொத்தம் **28,771** முகவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காக,

**1.12.2011** முதல் அவர்களுக்குக் கீழ்க்காணும் வீதங்களில் மத்திய அரசு மற்றும் மாநில அரசால் தரகு மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

| தொடர் எண் | முகவரமைப்பு வகை | சிறுசேமிப்புத் திட்டம் | சிறு சேமிப்பு முகவர்களின் மொத்த எண்ணிக்கை | மத்திய அரசின் ஆணைப்படி தரகுத் தொகை **1.12.2011** முதல் | மாநில அரசின் ஊக்கத் தொகை **31.3.2012** வரை |
|---|---|---|---|---|---|
| அ. | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் | அஞ்சலக மாத வருவாய் திட்டம், தேசிய சேமிப்பு பத்திரம், அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் (1,2,3 மற்றும் 5 ஆண்டுகள்) | 7179 | 0.5% | 0.5% |
| | | கிசான் விகாஸ் பத்திரம் (**19.11.2014** முதல் இந்திய அரசால் மீண்டும் அறிமுகப்படுத்தப் பட்டது) | | (15.7.2015 லிருந்து) **0.5**% லிருந்து **1.0**% ஆக உயர்த்தப் பட்டுள்ளது | |
| ஆ. | மகளிர் முகவர் திட்டம் (MPKBY) | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் | 21170 | 4% | 2% |
| இ. | அனுமதியளிக்கப்பட்ட முகவர்களின் பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் | பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் | 422 | -- | -- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஈ. | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம். | | -- | -- |
| | | மொத்தம் | 28771 | | |

**89.** மேற்கண்டவற்றில் மகளிர் முகவர் திட்டத்தின்கீழ் மட்டும் அஞ்சலக தொடர் வைப்புத் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து மகளிர் மட்டுமே சிறுசேமிப்பு முகவர்களாக நியமனம் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்திற்கு **31.03.2012** வரையில் முகவர்களுக்கு ஊக்கத்தொகையை வழங்க மாநில அரசு அனுமதித்துள்ளது.

**விளம்பரம்:**

**90.** பொது மக்களிடையே, சிறுசேமிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஒன்றிய அளவில் நாடகங்கள், மாவட்ட அளவில் பொருட்காட்சி அரங்கங்களில் குறும்படங்கள் திரையிடுதல் மூலமாக

ஆண்டு முழுவதும் முகாம்கள் சிறுசேமிப்புத் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

## அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

**91.** நிதி தொடர்பான தகவல்களை மிகவும் அர்த்தமுள்ள வகையில் பகுப்பாய்வு செய்யவும், மாநிலத்தின் கணக்குகளை மின்னணுத் தகவல் செய்முறை சாதனங்கள் மூலம் பகுப்பாய்வு செய்து சிறப்பான முறையில் வரவு செலவுத் திட்டமிடும் நோக்குடன், **1971**ஆம் ஆண்டு மத்திய வரவு செலவுத் திட்ட விவரங்கள் தொகுப்பு மையம் ஒன்றை அரசு தோற்றுவித்தது. இந்த மின்னணு தகவல் செய்முறை சாதனங்களைப் பயன்படுத்தி, அரசு துறைகளின் பலதரப்பட்ட செயல்பாட்டுத் தேவைகளை தொகுக்கும் வகையில், அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

**1972**ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிருவாக வசதிகளுக்காக மேற்கண்ட இரண்டு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு **1975**ஆம் ஆண்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது இந்த மையம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது.

(i) அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வு முடிவுகளை தொகுக்கும் பணிகள்

(ii) இடைநிலை மற்றும் மேல்நிலைப் பொதுத்தேர்வுகளுக்கான முகப்புத்தாள்கள் அச்சடித்தல்

(iii) ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி

(iv) பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்

**தேர்வுப் பணிகள்**

**92.** அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வு முடிவுகளை தொகுக்கும் பணிகள்

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**93.** அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம், அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் கீழ்கண்ட தேர்வுகளின் முடிவுகளைத் தொகுக்கும் பணியினை மிகுந்த கவனத்துடனும், துல்லியமாகவும் மேற்கொண்டு வருகிறது. முந்தைய கல்வியாண்டில் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் மேற்கொண்ட பணிகளின் விவரம் வருமாறு:—

| தேர்வுப் பணிகள் | மார்ச் 2014 | சிறப்பு துணைத் தேர்வு 2014 | அக்டோபர் 2014 | மொத்தம் |
|---|---|---|---|---|
| மேனிலைப்பள்ளி தேர்வு | 8,78,701 | 74,211 | 40,533 | 9,93,445 |
| பத்தாம் வகுப்பு தேர்வு | 10,94,710 | 83,877 | 46,439 | 12,25,026 |
| எட்டாம் வகுப்பு தேர்வு | 16,201 | – | – | 16,201 |
| ஊரக திறனாய்வுத் தேர்வு | 56,732 | | | 56,732 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பு தேர்வு | 48,831 | | | 48,831 |
| தேசிய வழி மற்றும் திறன்படிப்பு உதவித் தொகை திட்டத் தேர்வு | 1,49,070 | | | 1,49,070 |
| தொழில்நுட்பத் தேர்வு | 14,373 | | | 14,373 |
| தேசிய திறனாய்வுத் தேர்வு | 1,41,950 | | | 1,41,950 |
| பெரு மொத்தம் | 24,00,568 | 1,58,088 | 86,972 | 26,45,628 |

## விடைத்தாள்களுக்கு முகப்புத்தாள் அச்சடித்தல்

**94.** உயர்நிலை மற்றும் மேனிலை பொதுத் தேர்வுகளுக்கான முகப்புத்தாள்களை அச்சிடும் பணி அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மார்ச் /ஏப்ரல் **2015** உயர்நிலை மற்றும் மேனிலை பொதுத் தேர்வுகளுக்கான **1.68** கோடி முகப்புத்தாள்களை அச்சிட்டு வழங்குவதற்காக அரசு ரூபாய் **79,63,440/–**க்கு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

**ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி**

**95.** ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் / நகராட்சிப் பள்ளிகள் / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் ஆகியவற்றின் ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி கணக்குகளை கணினி வழி தொகுக்கும் பணி அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**96. 2007–2008**ம் ஆண்டு முதல் ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கு அதிகாரபூர்வமான வருங்கால வைப்பு நிதிக் கணக்குத் தாள்கள் வழங்க அரசுத் தகவல் தொகுப்பு விவர மைய ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. **2007–2008**ஆம் ஆண்டிற்கான அதிகார பூர்வமான கணக்குத் தாள்கள், தொடக்கக் கல்வி இயக்ககம் மூலமாக வழங்கப்பட்டுள்ளன. தலைமை அரசு நிறுவனத்

தணிக்கைத் துறையினரால், மொத்தமுள்ள **390** உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களில் இதுவரை **233** உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களில் **31.3.2014** வரையிலான இறுதி இருப்புக் கணக்குகளின் தணிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளன.

**பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்**

**97.** ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் / அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்கள் / நகராட்சிப் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம் சார்ந்த தகவல்கள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாநிலக் கணக்காயர் அலுவலகத்தால் பராமரிக்கப்பட்டு வந்த அரசுத்துறை பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டப் பணிகள் **2013–2014**ஆம் நிதியாண்டிலிருந்து அரசுத் தகவல்

தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதுவரை **4,03,413** பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு பங்களிப்பு ஓய்வூதிய குறியீட்டு எண்கள் வழங்கப்பட்டுள்ளன. அது பற்றிய விவரம் வருமாறு:–

| | துறைகள் | இதுவரை வழங்கப்பட்ட குறியீட்டு எண்கள் |
|---|---|---|
| (i) | அரசுப் பணியாளர்கள் | **2,93,604** |
| (ii) | அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்கள் / ஊராட்சி ஒன்றியம் / நகராட்சிப் பள்ளிகளின் பணியாளர்கள் | **87,759** |
| (iii) | உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்கள் | **22,050** |
| | | **4,03,413** |

**98.** அரசுப் பணியாளர்கள், அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்கள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு **2013–14** வரை

கணக்குத்தாள்கள் வழங்கப்பட்டுள்ளன. கணக்குத்தாள்கள், இணையதளத்தில் தேசிய தகவலியல் மையம் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

## அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத்துறை

**99.** அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறை உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, **1969** முதல் இயங்கி வருகிறது. அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகளுடன், பல்வேறு சட்டவரையறைக்கு உட்பட்ட (Statutory) வாரியங்கள் மற்றும் சட்டவரையறைக்கு உட்படாத (Non-Statutory) நிறுவனங்களின் தணிக்கை இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பின்வரும் வாரியங்கள் மற்றும் நிறுவனங்களின் தணிக்கை, அரசுத்துறை

நிறுவனத்தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சட்டப்படியான நிறுவனங்களின் தணிக்கை**

| தொடர் எண் | நிறுவனத்தின் பெயர் | தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| (i) | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | **2013 – 14** |
| (ii) | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் | **2013 – 14** |
| (iii) | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | **2013 – 14** |
| (iv) | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | **2013 – 14** |
| (v) | தமிழ்நாடு வக்ஃபு வாரியம் | **2012 – 13** |
| (vi) | தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் | **2013 – 14** |

**100.** மேலே தெரிவிக்கப்பட்டுள்ள சட்டப்படியான வாரியங்களின் ஆண்டுத் தணிக்கை உடனிகழ் தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு, அத்தணிக்கை அறிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வெளியிடப்படுவதுடன் அவற்றிலுள்ள பல்வேறு கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்கள் அரசுக்கும் பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

**சட்டவரையறைக்கு உட்படாத நிறுவனங்களின் தணிக்கை**

**101.** கீழ்க்கண்ட சட்டவரையறைக்கு உட்படாத நிறுவனங்களின் துறைத் தணிக்கை இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| தொடர் எண் | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை/ நிறுவனங்கள் |
|---|---|---|
| (i) | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | **94,605** |
| (ii) | வேளாண்மை விரிவாக்க மையங்கள் | **874** |
| (iii) | எடைகள் மற்றும் அளவைகள் நிறுவனங்கள் | **302** |
| (iv) | ஆண்டிற்கு ரூ.**0.20** இலட்சத்திற்கு மேல் தொடர் மானியம் மற்றும் ரூ.**1.20** இலட்சத்திற்கு மேல் தொடரா மானிய உதவி பெறும் நிறுவனங்கள் | **724** |

**102.** இத்துடன், தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர் நல வாரியம், நாட்டுப்புற கலைஞர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் ஏனைய **16** நல வாரியங்களின்

தணிக்கைகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**தணிக்கைச் சான்று**

**103.** மேலும், தணிக்கைக்குட்பட்ட சில நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களின் வருங்கால வைப்புநிதிக் கணக்கு முடிப்புகளுக்கான கருத்துருக்களுக்கு சான்றளிப்பதுடன் மானிய உதவிபெறும் நிறுவனங்களுக்கு, மானியத் தகுதிச் சான்று இத்துறையால் வழங்கப்பட்டு வருகிறது.

**ஏனைய பணிகள்**

**104.** அரசின் குறிப்பிட்ட ஆணைகளின்படி **14** அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகள் இத்துறையின் உதவி இயக்குநர்கள் / ஆய்வாளர்கள் நிலையில் உள்ள அலுவலர்களால் மேற்பார்வையிடப்பட்டு

அத்தகைய தணிக்கை தொடர்பான அறிக்கைகள் அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

**105.** மேலும், கீழ்க்காணும் தணிக்கை பணிகள் மற்றும் ஏனைய பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது.

(i) நிகர் நிலைப் பல்கலைக் கழகங்களின் நாட்டு நலப்பணித் திட்டம், தமிழ்நாடு அரசு மருத்துவ நல நிதித் திட்டம், குடும்ப பாதுகாப்பு நிதி மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதி ஆகியவற்றின் கணக்குகளின் தணிக்கை.

(ii) அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் கணக்குகள் தணிக்கை.

(iii) அயல்நாட்டு நிதி பங்களிப்பு ஒழுங்குமுறை சட்டம் **2010–**இன் கீழ் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் விதிமீறல்களை கண்டறியும் வகையில் சிறப்பு தணிக்கை.

(iv) அரசுத் துறையில் பணிபுரியும் அலுவலர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஆசிரியர்களின் சேமநல நிதிக் கணக்குகளை சரிபார்த்து சான்றளித்தல்.

**தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை**

**106.** தணிக்கையின்போது காணப்படும் கடுங்குறைபாடுகள் கொண்ட பத்திகளின் சுருக்கம் மாதந்தோறும் தொகுக்கப்பட்டு திருத்த நடவடிக்கைக்காக அந்தந்த துறைத் தலைவருக்கும் மற்றும் அரசின் துறைச் செயலாளரின் கவனத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

**தணிக்கைக் கட்டணங்கள்**

**107.** சட்டப்படியான வாரியங்களின் தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கைப் பணியாளர்களின் சம்பளச் செலவின அடிப்படையிலும், வக்ஃபு நிறுவனத்தின் நிகர வருவாயில் **1.5** சதவீதமும் தணிக்கை கட்டணமாக இத்துறையால் வசூலிக்கப்பட்டு, அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

**ஓ. பன்னீர்செல்வம்**
நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர்